
புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • மார்ச் (March), 05, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 10 • விலை(PRICE) ரூ.6.00

# சாதனைகளைத் தொடர வைப்போம்!

*இந்த ஆட்சியின் சாதனைகள் தொடர வேண்டும் என்று ஏன் கூறுகிறோம்? நேர்மையுடன் சிந்தித்துப் பார்ப்போம்!*

● கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியின் சாதனைகளைப் போல் தமிழ்நாட்டில் இதுவரை நடந்திருக்கிறதா?

● "பதவி ஏற்றவுடன் முதல்வர் ஸ்டாலின் முதல் கையெழுத்தோடு தொடங்கியது பெண்களின் கட்டணம் இல்லாப் பேருந்து பயணம்; மகளிர் உரிமைத்தொகை; புதுமைப்பெண்; பள்ளிக் குழந்தைகளுக்கு காலைச் சிற்றுண்டி; மக்களைத் தேடி மருத்துவம்; நான் முதல்வன்; என்று நூற்றுக்கணக்கான திட்டங்கள் அணிவகுத்து வந்து கொண்டே இருந்தன.

● அறிவிக்கப்பட்ட திட்டங்களில் இதுவரை நிறைவேற்றப்படாத திட்டம் என்று எந்த ஒரு திட்டத்தையாவது கூற முடியுமா ? எதிர்க்கட்சிகளால் கூடஇந்த திட்டங்களில் குற்றம் குறைகளை காணமுடியவில்லை?

● இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது இத்தகைய சாதனைகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் நிகழ்ந்திருக்கிறதா? இங்கே தான் நடந்தது.

● அதுமட்டுமா! பெண்களுக்கான உரிமை திட்டங்களின் வெற்றிகளை உணர்ந்து இந்தியாவில் பாஜக உள்ளிட்ட 8 மாநிலங்கள் இதை செயல்படுத்த தொடங்கிவிட்டன. வழிகாட்டியது தமிழ்நாடுதான்.

● பொருளாதார வளர்ச்சியில்; பெண் கல்வியில்; பள்ளிக்கல்வியில்; ஏற்றுமதியில்; தனிநபர் வருவாயில்; சமூக வளர்ச்சியில் என அனைத்து மாநிலங்களையும் விட தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. இதை கூறுவது யார் தெரியுமா? ஒன்றிய ஆட்சிதான்.

● ஒன்றிய பாஜக அரசின் பொருளாதார ஆய்வு அறிக்கைகளும் நிதி நிறுவனங்களுமே ஒப்புக் கொண்டிருக்கின்றன; மருத்துவ சேவைகளுக்கு அய்.நா விருது வழங்குகிறது.

● இப்படி இந்தியாவின் ஒரு மாநிலம் வளர்ச்சியில் சாதனைகளை நிகழ்த்தியிருப்பதை ஒன்றிய ஆட்சி பாராட்ட வேண்டுமா? வேண்டாமா?

● மாறாக இந்த வளர்ச்சிகள் ஒன்றிய ஆட்சியாளர்களை உறுத்துகிறது. ஏன் தெரியுமா?

● இந்த வளர்ச்சிகளுக்கு அடிப்படை திராவிடமாடல்; அனைவரையும் உள்ளடக்கிய சமூக நீதிமாடல்; சனாதனத்தை மறுக்கும் மாடல்!

● இந்தியாவை இந்துக்களின் ஒற்றைத் தேசமாக மாற்றுவதற்கு இந்த திராவிட மாடல் தான் தடைக்கல்லாய் நிற்கிறது.

● நமது தனித்துவமான மாநில அடையாளங்களை சிதைக்கிறார்கள். என்ன நடக்கிறது பாருங்கள்?

● திட்டங்களுக்கு அனுமதி இல்லை; நிதி ஒதுக்க மறுக்கிறார்கள்; ஆளுநர்களை ஆயுதமாக்கி மிரட்டுகிறார்கள்;அமலாக்கத் துறையும், புலனாய்வுத் துறையும் களமிறக்கப்படுகின்றன; சமஸ்கிருதமும் இந்தியும் மெல்ல மெல்ல நுழைகிறது; இந்தியா இந்து பெண் கடவுள்களின் பூமி என்ற 'வந்தே மாதர' பாடலை அனைத்து மதத்தினர் மீதும், மத நம்பிக்கை இல்லாதவர்கள் மீதும் திணிக்கிறார்கள். **எல்லாவற்றிற்கும் மேலாக அறிவியல் அடிப்படையில் உறுதி செய்யப்பட்ட தமிழர்களின் 'கீழடி' நாகரிக ஆய்வுகளை ஏற்க மறுக்கிறார்கள். ஆரியர்களின் கங்கைச் சமவெளி நாகரிக காலத்திலேயே தமிழர்களின் கீழடி' நாகரிகம் இருந்தது என்ற தொல்லியல் ஆய்வை மாற்றி எழுது என்று உத்தரவு போடுகிறார்கள். இதை விட வேறு கொடுமை உண்டோ!**

● மோடியா? லேடியா? என்று சவால் விட்ட ஜெயலலிதாவின் மறைவு அவர்களுக்கு வசதியாகப் பயன்பட்டது. தமிழகத்தில் தந்திரமாக ஊடுருவ அஇஅதிமுகவுக்கு வலை வீசினார்கள்.

● அஇஅதிமுகவை சின்னாபின்னமாக சிதைத்தார்கள்; ஊழல் வழக்குகளை வைத்து தலைவர்களை தங்கள் வலைக்குள் கொண்டு வந்தார்கள்.

● நான்காண்டு கால எடப்பாடி ஆட்சியை இயக்கியது யார்? ஒன்றிய பாஜக தான். இதை எடப்பாடியே ஏற்றுக் கொள்கிறார்.

●"மாநில உரிமைகளை அவர் அடகு வைத்தார்; உதய் மின் திட்டம்; உணவு பாதுகாப்பு சட்டம்; காஷ்மீர் உரிமை பறிப்பு சட்டம்; முத்தலாக் சட்டம்; விவசாயிகள் சட்டம்; டெல்லி மாநில உரிமை பறிப்பு சட்டம்; குடியுரிமை சட்டம் என்று அத்தனை சட்டங்களுக்கும் ஒப்புதல் தந்து மாநில உரிமைகளை சிதைக்கும் பாஜகவின் துரோகத்திற்கு துணை நின்றார்.

● ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு எந்த ஒரு பாஜகவின் சட்டத்துக்கோ, திட்டத்துக்கோ எடப்பாடி பழனிச்சாமி எதிர்ப்பு தெரிவித்திருக்கிறாரா? இல்லை! அனைத்துக்கும் பச்சை கொடிதான்; பெரும் துரோகம்!

● இப்போது அதிமுக அணி என்.டி.ஏ அணியாக பெயர் மாற்றப்பட்டு விட்டது. இது அமித் ஷாவின் அணி!



●தமிழ்நாட்டில் பாஜகவின் நேரடி அதிகாரத்துக்கு கதவுகளை திறந்து இரட்டை எஞ்சின் ஆட்சிக்காக காத்திருக்கிறார்கள்; அஇஅதிமுக கொடியில் பறக்கும் அண்ணாவின் படத்தை அழித்து அமித் ஷாவை வரைந்து கொண்டிருக்கிறார் எடப்பாடி.

● மற்றொரு பக்கம் தவெக விஜய் விசில் ரசிகர்களுடன் வருகிறார். "விஜய் தான் வரட்டுமே; ஒரு மாற்று வேண்டாமா? என்று சிலர் கேட்கிறார்கள்; நடிகர் சங்கத்தின் தலைவராக வேண்டுமானால் அவர் வரலாம்; ஆனால் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையோடு விளையாடுவதற்கு அவரை எப்படி அனுமதிக்க முடியும்?

● சினிமாவில் நடித்து கோடி கோடியாக பணம் குவித்து; தமிழ்நாட்டு மக்களின் இன்ப துன்பங்களில் எந்தப் பங்கும் வழங்காத ஒருவர்;' "நான் ஒருவனே தமிழ்நாட்டின் தலைவன்" என்று பேசலாமா ? என்மீது அவதூறு கூறினால் அதுமக்கள் மீதான அவதூறு என்று கொக்கரிப்பது ஆணவமா? இல்லையா?

● ஒன்றிய பாஜக ஆட்சியை எதிர்க்கவே மாட்டோம் என்று ஒரே நேர்கோட்டில் விஜயும், எடப்பாடியும் கைகோர்த்து களத்தில் நிற்கிறார்கள் என்ற உண்மை புரிகிறதா!

**வாக்காளர்களே!**

● திராவிட மாடல் ஆட்சியில் ஜாதி, மதக்கலவரங்கள் இல்லை; தடியடி துப்பாக்கிச் சூடுகள் இல்லை.

● ரேஷன் கடைகள் சிறப்பாக இயங்குகின்றன.

● பிரச்சனைகளை தீர்க்க அதிகாரிகள் மக்களை நோக்கி வருகிறார்கள்.

● நமது முதல்வர் மதக் கலவர சதிகளை முறியடித்துக் காட்டுகிறார்.

●"மாநில உரிமைகளுக்காக சட்டப் போராட்டம் நடத்துகிறார்.

● இவர் காலத்தில்தான் சட்டமன்றமே மக்கள் மன்றமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

● மக்கள் சந்திப்பில் மனம் நெகிழ்கிறார்.

● பெரியார் அம்பேத்கர் மார்க்ஸ் முதல் வள்ளுவர்; வள்ளலார் வரை நமது வழிகாட்டிகள் அனைவரும் கொண்டாடப்படுகிறார்கள்.

● **கொள்கை எதிரிகளையும் காழ்ப்புணர்வு இன்றி மதிக்கிறார்; எல்லாவற்றிற்கும் மேலாக கட்சிகளைப் பழிவாங்கும் ஜெயலலிதா காலத்தின் அரசியலை முற்றாக ஒதுக்கித் தள்ளி மக்களுக்கான சாதனைகளை நிகழ்த்தும் மகத்தான தலைவராக வலம் வருகிறார்.**

● ஆட்சியின் சாதனைகளை வெளிநாடுகளின் ஏடுகளும் புகழ்கின்றன. **திமுக ஆட்சியை உறுதி செய்வோம்!**

- திராவிடர் விடுதலைக் கழகம்

தலையங்கம்

# மோடியின் அற்ப அரசியல்

மோடி தனது பிரதமர் பதவிக்கு உரிய தகுதியை இழந்துகொண்டு வருவதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. மதுரை வந்த அவர் 7 ஆண்டுகளாக கட்டி முடிக்கபடாத எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் அரைகுறை வேலைகளைப் பார்வையிட கூடத் தயாராக இல்லை. மாறாக மதவாத சக்திகள் கலவரத்திற்கு திட்டமிடும் திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு சென்று தரிசனம் செய்கிறார்.

ஏற்கெனவே திட்டமிடப்பட்ட கலவரம் தோல்வியில் முடிந்த நிலையில் அதைத் தூண்டி விடுவதுபோல் அமைந்திருக்கிறது இந்த தரிசனம். அங்கே தீபம் ஏற்றச் சென்ற இந்து தீவிரவாதிகள் 'திருப்பரங்குன்றத்தை அயோத்தியாக மாற்றுவோம்' என்று வெறிப்பிடித்து பேசியதை ஊடகங்கள் ஒளிப்பரப்பின. "சிக்கந்தர் தர்காவை திருப்பரங்குன்றத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் இதுவே எங்கள் நோக்கம்" என்று ஹெச்.ராசா வெளிப்படையாகப் பேசினார்.

திருப்பரங்குன்றம் தரிசனத்திற்கு பிறகு பேட்டியளித்த மோடி இந்து மக்களின் உணர்வுகளை தமிழ்நாடு அரசு மதிக்கவில்லை என்கிறார். உண்மையில் திருப்பரங்குன்றத்தில் இந்துமக்களின் உணர்வுகளை கோயில் நடைமுறைகளை பின்பற்றிக் காப்பாற்றியது தமிழ்நாடு அறநிலையத்துறைதான். முதலமைச்சர் ஸ்டாலினின் இது குறித்து அளித்த பேட்டியில் "மதத்தின் பார்வையில் நான் எடுத்த முடிவல்ல; மாறாக ஒரு முதல்வர் என்ற முறையில் இருந்து நான் எடுத்த முடிவு" என்று தெளிவுபடுத்தி இருக்கிறார்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்டது தான் இவர்கள் தீபம் ஏற்றச் சென்ற எல்லைத்தூண் என்று ஆவணப்பதிவுகள் வெளிவந்துவிட்டன. இவ்வளவுக்குப் பிறகும் பொய்களையே இவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். பூரணச்சந்திரன் என்ற இந்துமுன்னணிக்காரர் தமிழ்நாடு அரசு உயர்நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தவில்லை என்ற ஒரு காரணத்தைக் கூறி தற்கொலை செய்து கொண்டார். இறந்து போன அந்த குடும்பத்திற்கு சென்று மோடி ஆறுதல் கூறியது மிக மிக மோசமான அருவருக்கத்தக்க அரசியல்.

இதன் வழியாக சங்கிகள் நடத்திய போராட்டத்திற்கு தனது ஆதரவை வெளிப்படுத்தி இருக்கிறார் மோடி. பூரணசந்திரன் உடல் மருத்துவமனையில் உடற்கூராய்வின் போது இந்துமத சக்திகள் உடலை எடுக்கக் கூடாது என்று கலவரத்தை உருவாக்கினர். அப்போது இந்த பிரச்சனையை அரசியல் ஆக்காதீர்கள்; இது எங்கள் குடும்பத்தோடு இருக்கட்டும் என்று பெற்றோர்களே கலவரக்காரர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதை அரசியலாக்குவதற்கு மோடி முயல்கிறார் என்று சொன்னால் இதைவிட அற்ப அரசியல் வேறு ஏதாவது இருக்க முடியுமா?

அதேபோல் தமிழ்நாடு அரசு சாதனைகள் எதுவுமே செய்யவில்லை என்று அப்பட்டமாக பொய் பேசுகிறார் மோடி. பொருளாதாரத்தில், பெண்கல்வியில், பள்ளிக் கல்வியில், ஏற்றுமதியில், தனிநபர் வருவாயில், சமூக வளர்ச்சியில் என அனைத்து மாநிலங்களை விட தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது என்று ஒன்றிய அரசின் அதிகார அமைப்புகளே கூறும் போது தன்னுடைய அரசின் கருத்துக்களையே ஒரு பிரதமர் தேர்தல் அரசியலுக்காக மறுக்கிறார் இதைவிட வெட்கக்கேடு வேறு ஏதாவது உள்ளதா!

அண்மையில் இஸ்ரேல் நாட்டுக்கு பயணம் செய்தார் மோடி. இஸ்ரேல் அதிபர் நெதன்யாகுவை காப்பாற்றுவதற்காக சென்ற பயணம் இது. சர்வதேச நீதிமன்றத்தில் இனப்படுகொலையாளி என்று குற்றம் சாட்டப்பட்டு கைதுக்கு உள்ளாகியிருப்பவர். உலக நாடுகளின் புறக்கணிப்புக்கு உள்ளாகியவர். அய்ரோப்பிய நாடுகள் காசா இனப்படுகொலைக்காக இஸ்ரேல் பிரதமரை ஒதுக்கி வைத்துள்ளன. இந்த நிலையில் மோடியின் ஆதரவு இஸ்ரேல் பிரதமருக்கு தேவைப்படுகிறது. ஊழல் குற்றச்சாட்டுகளையும், இனப்படுகொலைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கின்ற இஸ்ரேல் பிரதமர் அதிபர் தேர்தலை சந்திப்பதற்கு அரசியல் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்து கொள்வதற்கான அரசியல் காய்களை நடத்தி வருகிறார். இதற்கு மோடி துணை போகிறார். வரலாற்றுக் காலம்தொட்டு இந்தியா ஆதரித்து வந்த பாலஸ்தீன பிரச்சனைக்கு மோடி மகத்தான துரோகத்தை செய்து இருக்கிறார்.

தொழில்ரீதியான உடன்படிக்கை மட்டுமல்ல கல்வி, பண்பாடு தொடர்பான உடன்படிக்கையையும் மோடி செய்திருக்கிறார். அடுத்த 5 ஆண்டுகளில் 50,000 இந்தியர்களுக்கு வேலைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. கடந்த 2017-ம் ஆண்டு மோடி இதே போல் இஸ்ரேல் சென்ற போது இத்தகைய நெருக்கம் உருவாகவில்லை. ஆனால் இப்போது மோடி கலந்து கொண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் இஸ்ரேல் பிரதமர் வழமைக்கு மாறாக கலந்து கொண்டிருக்கிறார். இந்த நிலையில் இஸ்ரேலில் பேசிய பிரதமர் மோடி இஸ்ரேல் நடத்திய இனப்படுகொலை பற்றி வாய்திறக்காமல் ஹமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலை மட்டும் கண்டித்து பேசியுள்ளார். காசாவில் 72,000 பேர் இனப்படுகொலை செய்தது பற்றி வாய்திறக்கவில்லை.

இஸ்லாமிய வெறுப்பைக் கொண்ட யூத தீவிரவாதமும், மோடியின் இந்துத்துவா செயல்திட்டமும் இஸ்லாமிய வெறுப்பை கக்கிக் கொண்டு இருக்கின்றன. அதே பார்வையில் தான் இங்கே தமிழ்நாட்டிற்கு வந்து இஸ்லாமிய எதிர்ப்புக்கு நெருப்பை பற்ற வைக்கிறார். மோடியின் அற்ப அரசியலுக்கு தமிழ்நாடு பதிலடி தரும்.

## தேர்தல் ஆய்வுகள் அம்பலப்படுத்துகின்றன

# பார்ப்பன உயர்ஜாதி கட்சியே பாஜக!

**பாஜகவின் வலிமையான ஆதரவு சக்தி பார்ப்பனர்களும் உயர்ஜாதியினரும் தான் என்று ஆய்வுகள் வெளிவந்துள்ளன. மார்ச்-1 தேதி வெளியான 'இந்து' ஆங்கில நாளேடு இது குறித்து ஆய்வு கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் இடம்பெற்றுள்ள தகவல்கள்:**

● உயர்கல்வியில் ஜாதிப் பாகுபாடு காட்டுவது தண்டனைக்குரிய குற்றம் என்று அண்மையில் பல்கலைக்கழக மானியக் குழு ஒழுங்குமுறை விதியை உருவாக்கியது. இதற்கு இட ஒதுக்கீடு கோட்டாவில் வராத (உயர்ஜாதி ஏழை என்ற) பார்ப்பன உயர்ஜாதி மாணவர்களிடமிருந்து வடமாநிலங்களில் கடுமையான எதிர்ப்புகள் வந்தன. பல்கலைக்கழங்களில் போராட்டங்கள் வெடித்தன.

● ஜாதி என்ற சொல்லை அகற்ற வேண்டும் என்றும் தங்களுக்கும் பாகுபாடுகள் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

● இவர்களுக்கான இட ஒதுக்கீட்டை பாஜக ஆட்சிதான் கொண்டு வந்தது. பாஜகவின் தீவிர ஆதரவாளர்களான இந்த 'உயர்ஜாதி கோட்டா' பிரிவினர் தங்களுக்கு எதிராக பாஜக செயல்படும்போது வீதிக்கு வெளியே வந்து போராடுகிறார்கள்.

● பாஜகவின் வலிமையான வாக்கு வங்கி சக்தியாக காலம்காலமாக உயர்ஜாதியினரே இருந்து வருகிறார்கள் என்று ஆய்வு முடிவுகளில் இருந்து தெரிய வருகிறது. இது குறித்து தேசிய தேர்தல் ஆய்வு நிறுவனம் ஒரு ஆய்வை 'Lokniti-CSDS' நிறுவனம் வழியாக நடத்தியுள்ளது.

● கடந்த 30-ஆண்டுகளாக பார்ப்பன உயர் ஜாதியினரின் வாக்குகள் ஒருங்கிணைந்து பாஜகவுக்கு விழுந்துள்ளது தெரியவந்துள்ளது. 2024-ல் 60 விழுக்காடு பேர் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், 53 விழுக்காடு பேர் நேரடியாக அந்த கூட்டணியில் உள்ள பாஜகவுக்கும் வாக்களித்திருக்கிறார்கள். 14 விழுக்காடு மட்டுமே காங்கிரசுக்கு வாக்களித்துள்ளனர்.

● 2014 ஆம் ஆண்டிலிருந்து இந்த வாக்கு விழுக்காடு 20% அதிகமாக உயர்ந்து வருகிறது.

● மாநில அளவில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் உ.பி, ம.பி, ராஜஸ்தான் மாநிலங்களில் கடந்த மூன்று நாடாளுமன்ற தேர்தல்களில் 60 விழுக்காடு பார்ப்பன உயர் ஜாதியினரின் வாக்குகள் பாஜகவுக்கு கிடைத்துள்ளது.
டெல்லி மற்றும் இமாச்சல பிரதேசத்திலும் இதே நிலை தான்.

● தெலுங்கானாவில் பாஜக பல்லாண்டு காலமாகவே பலவீனமாக இருந்து வந்தது. 2014-ல் பாஜகவுக்கு பார்ப்பன உயர்ஜாதியினர் 12 விழுக்காடு மட்டுமே வாக்களித்துள்ளனர். ஆனால் 2024 தேர்தல்களில் இது 53 விழுக்காடாக உயர்ந்தது.

மேற்கு வங்கம், அஸ்ஸாம், ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களின் புள்ளிவிவரங்களும் இதையே உறுதி செய்கின்றன. சட்டமன்றத் தேர்தல்களில் மாநிலத் தலைவர்கள் உருவாக்கும் கூட்டணியில் பார்ப்பன உயர்ஜாதியினர் தேசிய கட்சியான பாஜக இருக்கும் அணிக்கே வாக்களித்து வருகிறார்கள்.

எனவே பார்ப்பன உயர்ஜாதியினருக்கு எதிராக எந்த ஒரு திட்டத்தையும் ஒன்றிய ஆட்சி செயல்படுத்தாது. 1996- ஆண்டிலிருந்து 2024 வரை நடந்த தேர்தலிகளில் பார்ப்பன உயர்ஜாதியினர் பாஜகவுக்கு அளித்த வாக்கு விழுக்காட்டை புள்ளிவிவரங்களுடன் மாநில வாரியாக இந்து நாளேடு வெளியிட்டு இருக்கிறது.

மாணவர் எதிர்ப்புக்குப் பிறகு உச்சநீதிமன்றம் 'இந்த ஜாதிப் பாகுபாடு' விதியை தடை செய்துள்ளது. அதைத் தொடர்ந்து பார்ப்பன மாணவர்களுக்கு பணிந்து ஒன்றிய ஆட்சி விதியை திரும்பப் பெற முடிவு செய்துள்ளது.

**(குறிப்பு : சமூகநீதி அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர்களுக்காக இந்த முடிவை தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் வரவவேற்று முகநூலில் பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது).**

# சங்கிகளை தோலுரித்த 'திருப்பரங்குன்றம் பைல்ஸ்'

'திருப்பரங்குன்றத்தை அயோத்தியாக்குவோம்!' என்ற முழக்கத்தோடு மதவெறி சக்திகள் கலவர முயற்சியில் இறங்கி உள்ளனர். சிக்கந்தர் தர்காவை இடிக்கும் நோக்கத்தோடு முருகன் கோயிலில் தீபம் ஏற்றும் பிரச்சினையை கையில் எடுத்துள்ளார்கள். இந்த வரலாற்று பின்னணியையும் கலவரக்காரர்களின் சதி முயற்சியையும் அம்பலமாக்குகிறது 'திருப்பரங்குன்றம் பைல்ஸ்' என்ற ஆவணப் படம்.




'அறக்கலகம்' என்ற வலையொளி (யூடியூப்) குழு இப்படத்தை மிகச்சிறப்பாக தயாரித்து உள்ளது. திருப்பரங்குன்றம் மட்டுமின்றி தமிழ்நாடு முழுதும் பண்பாட்டு ரீதியாக இசுலாமியர்களும் இந்துக்களும் சகோதரத்துவ உணர்வுடன் காலம் காலமாக வாழ்ந்து வருவதை இப்படம் கண்முன் நிறுத்துகிறது. கிராமங்களுக்கு நேரில் சென்று இசுலாமிய, இந்து மக்களின் பேட்டிகளை உணர்வுபூர்வமாக பதிவு செய்திருக்கிறார்கள். இந்த ஆவணப்படம் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமையகத்தில் மார்ச்-1, பகல் 11 மணியளவில் திரையிடப்பட்டது. ஊடகவியலாளர் ரௌத்ரா நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

சத்யா வரவேற்புரையாற்றினார். மைனர் வீரமணி நோக்கவுரையாற்றினார். தோழர்கள் லதா, சத்யா, பொன்ராஜ், உமாபதி குழுவினர் பாடல் பாடினார்கள். பாட்டர் ஆவணப் படம் திரையிடல் பணிகளை மேற்கொண்டார். U2BRUTUS வலையொளி குழு இந்த திரையிடலுக்கு ஏற்பாடுகளை செய்தது. இந்தக் குழு தொடங்கியுள்ள 'U2BRUTUS Reads' என்ற அமைப்பின் முதல் நிகழ்ச்சியாக இந்த திரையிடல் நிகழ்ந்தது. நிகழ்ச்சியில் பால்.வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் வாஞ்சிநாதன், அய்.ஜே.கே தலைவர் ஹைதர் அலி, கொட்டுக்காளி திரைப்பட இயக்குநர் பி.எஸ் வினோத்ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். ஆவணப்படத்தின் சிறப்புகள் குறித்து சிறப்பு விருந்தினர்கள் பேசினர்.

படம் பார்வையாளர்களிடம் உணர்வலைகளை தட்டி எழுப்பியது. தமிழ்நாடு முழுவதும் இந்த ஆவணப் படத்தைக் கொண்டுச் செல்ல வேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர். படத்தை இயக்கிய இயக்குநர்கள் தவம் மற்றும் தமிழ்தாசன், படத்தொகுப்பாளர் காமாட்சி ராமன், ஒளிப்பதிவாளர் ஹரி ஆகியோருக்கு பெரியார் படம் நினைவு பரிசாக வழங்கப்பட்டது.

# சக்லத்வாலா எழுதிக் கொடுத்ததைத்தான் பெரியார் படித்தாரா?

**ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் [14]** - கொளத்தூர் மணி

*1931 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ஆம் தேதி விருதுநகர் மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிந்து இரவு சாப்பாட்டிற்குப் பிறகு விஷய ஆலோசனைக் கூட்டம் மாநாட்டு பந்தலில் திருவாளர் பாண்டியன் அவர்கள் தலைமையில் இரவு 10:30 மணிக்குத் துவங்கப்பட்டு இரவு 3:30 வரை நடந்தது. விஷய ஆலோசனைக் கமிட்டி ஆரம்பம் ஆனதும், சோழவந்தான் திரு. வெங்கடசாமி அய்யர் அவர்கள் விஷய ஆலோசனைக் கமிட்டிக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொன்னார். இதற்குத் தலைவர் அவர்கள் அகாலம் ஆகிவிட்டதால் இனி தேர்தல் நடத்துவது சிரமம் என்றும், இருந்தபோதிலும் கூட்டத்தின் அபிப்ராயத்தைத் தெரிய ஆசைப்பட்டு சபையின் அபிப்பிராயம் கேட்டார். பெரும்பான்மையானவர்கள் பொதுக் கூட்ட முழுமையுமே விஷய ஆலோசனைக் கமிட்டியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். பிறகு அந்தப்படியே தீர்மானிக்கப்பட்டது.*

*முதன்முதலாக மதங்கள் கண்டனத் தீர்மானம் விவாதிக்கப்பட்டது. அதில் சிறிது காரமான விவாதம் நடந்தது என்றாலும் முடிவில் ஒரே ஒரு ஓட்டு தான் விரோதமாய் இருந்தது. பிறகு கதர் தத்துவக் கண்டன தீர்மானத்திலும் சிறிது விவாதங்கள் நடந்தது. எனினும் அதற்கு மூன்று ஓட்டுகள் மாத்திரம் விரோதமாகவும் மற்ற தீர்மானங்கள் எல்லாம் ஏகமனதாகவுமே நிறைவேற்றப்பட்டது.*

*மறுநாள் காலையில் 9.8.1931 பத்தரை மணிக்கு மாநாடு கூடியதும் தீர்மானங்கள் எல்லாம் மாநாட்டில் ஏக மனதாகவே நிறைவேறின. கதர்கண்டனத்துக்கு மாத்திரம் ஒரே ஒருவர் எதிரிடையாய்க் கை தூக்கினர் என்றாலும் யாரும் எதிர்த்துப் பேசவே இல்லை. கதர் தீர்மானம் ஓட்டுக்கு விடும் முன் ஒரு நண்பர் அதாவது நாச்சியார்புரம் திரு. ப. ஜீவானந்தம் அவர்கள் எழுந்து கதர் கட்டலாமா அல்லது வேண்டாமா என்று ஒரு கேள்வி கேட்டார்.*

*அதற்கு திரு. எஸ். ராமநாதன் அவர்கள், "திரு.காந்தியார் அன்னியர் துணியைக் கொளுத்துவது கிழித்தெறிவது என்பது போன்ற அளவு பலாத்கார உணர்ச்சியும் துவேஷ உணர்ச்சியும் நமக்கு இல்லை என்றும், கதர்த் துணி இடத்தில் நமக்கு எவ்வித விரோதமும் இல்லை என்றும், கதர் சுயராஜ்யத்தைக் கொடுக்கும் என்பதிலும் கதர் ஒரு தேசிய முற்போக்குக்கு ஆனது என்பதிலும் அது ஒரு தேசியத் தொழில் என்பதிலும் கதர் பொருளாதார திட்டம் என்பதிலும் தமக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை என்றும், கதர்த் தத்துவ உணர்ச்சி மக்களின் சமதர்மக் கொள்கைக்கும் கூட்டுறவுக்கும் தொழில் முற்போக்குக்கும் விரோதம் என்றுமே தாம் கருதுவதாகவும், இதற்காக இப்பொழுது கட்டி இருக்கும் கதரைக் கொளுத்தவோ, வாங்கியிருக்கும் கதரைக் கிழித்தெறியவோ வேண்டியதில்லை என்றும், கதர் வாங்குவதால் தாங்கள் பொருளாதார நஷ்டத்தால் பாதிக்கப்படுவதில்லை என்று கருதுகின்றவர்கள் வாங்கி உபயோகிப்பதற்கு தீர்மானம் விரோதம் இல்லை" என்றும் சொன்னார்.*

*ஜீவாவின் வாழ்க்கை வரலாற்றாளர்கள் சொல்வதைப் போல விஷய ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானங்களை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றினார் என்பதற்கும், கடுமையான நீண்ட விவாதம் நடந்தது என்பதற்கும் எந்த சான்றும் இல்லை; அடுத்த நாள் வாக்கெடுப்புக்கு சற்று முன்னர் கதர் கட்டலாமா வேண்டாமா என்று மட்டும் கேள்வி எழுப்பி விடை பெற்றுள்ளார் என்னும் நிலையில், ஏன் ஜீவா வரலாற்றாளர்கள் இப்படி எழுதி உள்ளனர், நிச்சயமாக ஜீவாவின் வாய்வழி சொற்களில் நம்பிக்கை கொண்டு அவர் புனைந்து உரைத்த வீரச்செயல்களை நம்பிக் கொண்டு தான் இப்படியாக எழுதியிருக்க முடியும்!*

**ஒன்று கம்யூனிஸ்ட் சக்லத்வாலா எழுதிக் கொடுத்ததைத்தான் பெரியார் படித்தார் என்று சொல்லியிருக்கக் கூடாது. பெரியாராகவே பேசினார் என்றால் இங்கிலாந்தில் இருக்கிற தொழிலாளரிடம் போய், பார்ப்பன ஆதிக்கத்தையும் பனியா சுரண்டலையும் மறந்துவிட்டார் என்று ஒரு புதிய நகைச்சுவையையாவது சொல்லாமல் இருந்திருக்க வேண்டும்.**

*மேலும் ஜீவா விருதுநகர் மாநாட்டை பற்றி, அவரது 'ஈரோட்டுப்பாதை சரியா' நூலில், "இந்த மகாநாட்டின் முக்கிய அம்சம், எல்லா மதங்களும் ஒழிய வேண்டுமென்ற தீர்மானம். இங்கும் கண்டனக் கோடாலி காந்திஜியின் மீதும், கராச்சித் திட்டத்தில் மத நடுநிலைமைத் தீர்மானம் கண்ட காங்கிரஸ் மீதுமே வீசப்பட்டது. மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இந்தி எதிர்ப்பு, கதர் எதிர்ப்புத் தீர்மானங்கள், பகுத்தறிவு இயக்கத்தின் பலன்கள் என்று கூறப்பட்டபோதிலும் காங்கிரஸ் எதிர்ப்பு நோக்கம் கொண்ட அரசியல் தீர்மானங்களே" என்கிறார்.*

## கராச்சி காங்கிரஸ் மாநாடு

*1931 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கராச்சியில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு கூடியது. அந்த மாநாட்டுக்கு முன்னதாகவே "கராச்சிக்கு போகின்றவர்களே! இந்தியாவுக்கு எது வேண்டும்? என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. அதில் மூன்று கோரிக்கைகளைப் பெரியார் முன்வைக்கிறார். ஒன்று மக்களுக்குள் பிறவியில் உயர்வு தாழ்வு உணர்ச்சி மறைதல், இரண்டு ஆண் பெண் வித்தியாச உணர்ச்சி ஒழிதல், மூன்று ஏழை பணக்காரன் என்ற தன்மை உணர்ச்சி அழித்தல் ஆகியவை மூன்றுமே முக்கியமாகும் என்று குறிப்பிடுவதோடு, "சமதர்மம் என்பது சுயராஜ்யம் வந்தபின் தானாகவே வந்துவிடும் அல்லது பிறகு உற்பத்தி செய்து கொள்ளலாம் என்று சொல்லி வருவதன் மூலமே தெரியலாம். சுயராஜ்யம் பெற்றாலே சமதர்மம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லுவது அறியாமை அல்லது உண்மையை மறைத்து சொல்லுவது என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது. ஏனெனில் சுயராஜ்யம் பெற்ற தேசங்களில் எல்லாம் பூரண சுயேச்சை பெற்ற தனி அரசு நாடுகளில் கூட சமதர்மம் இல்லாமலும், சமதர்மத்திற்குப் பாடுபடுவதால் அதன் எதிரிகள் சுயராஜ்யம் இல்லாவிட்டால் கூட பாதகம் இல்லை; சமதர்மம் மாத்திரம் கூடாது என்று கிளர்ச்சி செய்வதும் நாம் அறியாததல்ல. ஆகவே சுயராஜ்யத்திற்கும் சமதர்மத்திற்கும் சம்பந்தமில்லை என்பதை சமதர்மத்தில் லட்சியம் உள்ளவர்கள் நன்றாய் உணர வேண்டுமாய் வலியுறுத்துகிறோம். அன்றியும் சுயராஜ்யத்தின் திட்டமே வேறு என்பதையும், அதனால் பயன் அடைபவர்கள் வேறு என்பதையும் நன்றாக யோசித்து உணர வேண்டும். சுயராஜ்யம் கிடைத்தால் சம தர்மம் கிடைத்துவிடும் என்று நம்புகிறவர்களும் சமதர்மம் இல்லாமல் சுயராஜ்யம் கிடைத்தால் மக்கள் நடைமுறையாக நலமடைவார்கள் என்று எண்ணுகிறவர்களும் கண்டிப்பாய் ஏமாந்து போவார்கள் என்பதை உறுதியாய் சொல்லுகின்றோம்" என்று அந்த தலையங்கத்தில் குறிப்பிடுகிறார் பெரியார்*

*கராச்சி மாநாடு முடிந்த பின்னால் ஏப்ரல்-5ல் வெளிவந்த குடிஅரசு இதழில் 'கராச்சி' என்ற தலைப்பில் மிக நீண்டதொரு தலையங்கம் எழுதியிருக்கிறார். அம்மாநாட்டு நடப்புகளில் பெரியார் மட்டும் கருத்து மாறுபாடு கொண்டார் என்பதற்கு மேலாக வேறு யாரெல்லாம் கராச்சி மாநாடு பற்றி எதிர் கருத்து சொல்லி இருக்கிறார்கள் என்பதற்கு இரண்டு பேருடைய உரையை அந்த தலையங்கத்தில் எடுத்துக்காட்டுகிறார். முதலாவது உரை கராச்சி காங்கிரஸின் வரவேற்க கமிட்டி தலைவர் சுவாமி கோவிந்தானந்தர் கூறியதின் சாரம்:- "பாமர மக்களுக்கு அனுகூலமான ஆட்சியை ஸ்தாபிக்க வேண்டும் என்பது எங்களது நோக்கம். ருசியாவின் சமதர்மக் கொள்கையை இந்தியாவுக்கு ஏற்ற விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதே எனது அவா. சமதர்மத்தோடு கூடின பூரண சுயேச்சையே இந்தியாவின் முடிவான லட்சியம். இந்தியாவின் ஜீவநாடி காந்தி - இர்வின் ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை. பகத்சிங்கும் மற்ற தேச பக்தர்களும் செய்த தியாகத்தை அனுகூலமாய் கொண்டு கையில் வலுத்தவர்களும் ராஜீயவாதி(அரசியல்வாதி)களும் இப்போது பயனடைந்து வருகிறார்கள்"*

*அடுத்தது மாநாட்டுத் தலைவர் சுபாஷ் போஸ் பேசியதின் சாரமாவது:- "காங்கிரஸ் கொள்கைகள் பயனற்றதாகவும் பலவீனம் உள்ளதாகவும் இருக்கின்றது. காங்கிரஸ் தலைவர்களோ முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகின்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களது நடத்தைகளோ வாயில் பேசுவது ஒன்றாகவும், காரியத்தில் செய்வது வேறு ஒன்றாகவும் இருக்கின்றன. அவர்களது வேலை திட்டங்களோ எவ்வித புதிய மாறுதல் கொள்கைகளும் அற்றவைகளாகும். அவர்கள் உள் எண்ணங்களோ எப்படியாவது மக்களிடத்தில் விஷயங்களை சரிக்கட்டி காட்டிக் கொண்டு போனால் போதும் என்பதே ஆகும். அவர்களது லட்சியங்களோ ஜமீன்தார்களுக்கும் குடியானவனுக்கும், பணக்காரனுக்கும் கூலிக்காரனுக்கும், மேல் ஜாதிக்காரன் என்பவருக்கும் தீண்டப்படாத என்போருக்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் எல்லோருக்குமே தாங்கள் நல்ல பிள்ளையாய் இருக்க வேண்டும் என்பதே லட்சியமாய் கொண்டவர்கள். நமக்கு சுதந்திரத்தை சம்பாதித்துக் கொடுக்க காங்கிரஸ்காரர்களால் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு சிறிதும் இல்லை. ஆதலால் இந்தியா சுதந்திரம் அடைய வேண்டுமானால் வேறு ஒரு புதிய ஸ்தாபனத்தை உண்டாக்கி கொள்ள வேண்டும்" என்பதாகும்.*

*மேலும் சுதந்திரத்திற்காக வகுக்கப்பட்ட கொள்கை விஷயத்திலும் திரு.போஸ் அவர்கள் கூறியதாவது:- "விவசாயிகள் தொழிலாளிகள் ஆகிய இவர்களுக்கு சமதர்மம் ஏற்பட வேண்டும்; ஜாதி வேற்றுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்; சமூகம் மதம் என்பதான மூடநம்பிக்கைகள் எல்லாம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்; பெண்களை புதிய தர்மங்களை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்பன ஆகியவைகள் ஆகும்." ஆகவே இந்தக் கொள்கைகள் கூட இதுவரை குடிஅரசு பிரச்சாரம் செய்து வந்ததோடு இது சுயமரியாதை இயக்கத்தின் முக்கியமான கொள்கைகளாகவும் இருப்பது யாவரும் அறிந்ததே ஆகும் என்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.*

*ஜீவா தனது ஈரோட்டுப் பாதை சரியா நூலில் 'சமதர்ம நாத்திக இயக்கம்' என்ற தலைப்பில் "சுயமரியாதை பகுத்தறிவு இயக்கம் நாளடைவில் சமதர்ம நாத்திகப் பிரச்சாரத்திலும் இறங்கியது. சமதர்ம நாஸ்திக பிரச்சாரம் செய்ய சோவியத் யூனியனின் சமூக வாழ்வு எடுத்துக்காட்டாக இருந்தது சுயமரியாதைக்காரர்களுக்கு, அங்கு மதமற்ற சமூக வாழ்வை கண்டனர், எனவே ரஷ்ய காதல் பிறந்தது. ஈ.வெ.ரா. ரஷ்யாவுக்குப் போக விரும்பினார் என்று குறிப்பிட்டுள்ளார்*

*அதே பக்கத்தில் ஈ.வெ.ரா ஐரோப்பா சென்றிருந்த காலத்தில் தோழர் சிங்காரவேலின் தொடர்பு சமதர்ம இயக்கத்திற்கு கிடைத்தது. சிங்காரவேலு குடிஅரசு பத்திரிக்கையில் தொடர்ச்சியாக எழுதிய கட்டுரைகள் சமதர்மம், நாத்திகம் ஆகியவைகளைப் பற்றிய புத்தொளியையும் புதிய பார்வையையும் சுயமரியாதை இயக்கத்தாருக்கு அளித்தன என்கிறார் ஜீவா.*

*1932 ஆம் ஆண்டு ஈ.வெ.ரா. இங்கிலாந்து சென்றிருந்தபோது பொதுவுடமை இயக்கத்தைச் சார்ந்த தோழர் சக்லத்வாலாவின் நட்பு கிடைத்தது. ஒரு தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவர் லான்ட்ஸ்பரி உரையாற்றினார். லாண்ட்ஸ்பரிக்கு விடை கூறும் முறையில் ஈ.வெ.ரா.வுக்கு பேச சந்தர்ப்பம் கிடைத்தது. தோழர் சக்லத் வாலா எழுதிக் கொடுத்த பிரசங்கத்தை ஈ.வெ.ரா படித்தார். "இந்தியர்களாகிய எங்களை நீங்கள் ஒரு பரிகசிக்கத்தக்க சமூகமாகக் கருதலாம். ஆனால் நாங்கள் பிரிட்டிஷ் தொழிற் கட்சியை ஆட்சியை மிகமிக பரிகசிக்கத்தக்க ஒன்றாகக் கருதுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்."*

*"இந்தியச் சுரங்கங்களில் 10 மணி நேர வேலை கொடுக்கப்படுகிறது. சுமார் 40 ஆயிரம் பெண்கள் தினம் 5 அணா கூலிக்கு பூமிக்குள் வேலை செய்கிறார்கள். இந்தக் கொடுமையையும் ஆபாசத்தையும் போக்க தொழிற்கட்சி அரசாங்கம் என்ன செய்தது?*

*அவ்வளவோடு மாத்திரம் அல்லாமல், இந்தியா தனது - இந்திய அரசர்களும், ஜமீன்தார்களும், முதலாளிமார்களும், ஐரோப்பிய வியாபாரிகளுமே ஆதிக்கம் வகிக்கும்படியானதும் தொழிலாளிகளுக்கும், பணக்காரர்களுக்குமே பாத்யமும், பொறுப்பும் இல்லாததுமான ஒரு அரசியல் சபை மூலம் நிர்வாகம் கிடைக்கும் படியான காரியத்திற்கு உதவி செய்கிறார்கள். ஆதலால் யார்க்ஷயர் தொழிலாளிகளே! நீங்கள் இந்தப் போலிக் கட்சிகளையும், கொள்கைகளையும் நம்பாமல் மனித சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் உண்மையாகவே போராடுவதற்காக உலகத் தொழிலாளிகளின் ஒற்றுமையை எதிர்நோக்கிக் கொண்டிருங்கள்."*

*கம்யூனிஸ்ட் சக்லத்வாலாவோடு சேர்ந்தபோது ஈ.வெ.ரா பார்ப்பன ஆதிக்கத்தையும், பனியாசுரண்டலையும் மறந்துவிட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் என்ன தர்க்க நியாயம் உள்ளது? ஒன்று கம்யூனிஸ்ட் சக்லத்வாலா எழுதிக் கொடுத்ததைத்தான் பெரியார் படித்தார் என்று சொல்லியிருக்கக் கூடாது. பெரியாராகவே பேசினார் என்றால் இங்கிலாந்தில் இருக்கிற தொழிலாளரிடம்போய், பார்ப்பன ஆதிக்கத்தையும் பனியா சுரண்டலையும் மறந்துவிட்டார் என்று ஒரு புதிய நகைச்சுவையையாவது சொல்லாமல் இருந்திருக்க வேண்டும். ஆனாலும் ஜீவா சொன்னார்; எனவே நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்ற போக்கைத் தான் 'ஈரோட்டுப் பாதை சரியா' என்ற நூல் நமக்குச் சொல்லுகிறது.*

**- தொடரும்**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# தேர்தல் பரப்புரையில் பம்பரமாய் சுழலும் கழகத் தோழர்கள்

**தமிழ்நாட்டில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திமுக ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்து கழகத் தலைமைக்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை செயல்படுத்தும் விதமாக திருப்பூர்,சேலம்,சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் அனல் பறக்கும் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகிறார்கள். தேர்தல் அறிவிப்பு வருவதற்கு முன்பே தயாராகி வருகின்றனர். தினமும் 3 முதல் 4 தெருமுனை கூட்டங்கள், பொதுகூட்டங்கள் என கழகத் தோழர்கள் தீவிரப் பரப்புரையில் ஈடுபட்டு வருகிறார்கள். முதல் நாள் நடைபெற்ற பரப்புரை செய்திகளின் தொகுப்பு:**



**திருப்பூர்:** மாவட்டக் கழகம் சார்பில் கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமையில் 'தொடரட்டும் தமிழ்நாட்டில் சாதனைகள்! திமுக ஆட்சியை உறுதி செய்வோம்!' என்றத் தலைப்பில் 27.02.2026 அன்று புதிய பேருந்து நிலையம், ரயில் நிலையம்- பெரியார் சிலை, சிடிசி வளைவு,வீரபாண்டி ஆகிய இடங்களில் நாள் முழுவதும் தொடர் பரப்புரைக் கூட்டங்கள் முகில்ராசு முன்னிலையில் நடைபெற்றது.




புதிய பேருந்து நிலையத்தில் பரப்புரை தொடக்கமாக கழகம் சார்பாக நல்லகண்ணு அவர்களுக்கு கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமையில் வீர வணக்கம் செலுத்தப்பட்டது. தமிழ் அமுதன் (மார்க்சிய முற்போக்காளர்கள் பேரவை), முகில் இராசு (மாவட்டத் தலைவர்) வீர வணக்க உரை நிகழ்த்தினர். தொடர்ந்து "தொடரட்டும் தமிழ்நாட்டில் சாதனைகள்! திமுக ஆட்சியை முடிவு செய்வோம்!" தெருமுனை கூட்டம் கழக சமூக ஊடக பொறுப்பாளர் பரிமளராசன் தொடக்க உரை நிகழ்த்தினார். சோழன் (ஆதித்தமிழர் பேரவை வடக்கு மாவட்டச் செயலாளர்), அருண் நவீன மனிதர்கள் குழுவின் அமைப்புச் செயலாளர்), கார்மேகம் (மக்கள் பாதுகாப்பு அமைப்பு) ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

கழகத் தோழர்கள் முத்து, சங்கீதா, முகில் இராசு, அய்யப்பன் (வடக்கு ஒன்றிய அமைப்பாளர்), குமார் (த.மு எ ச மாவட்டச் செயலாளர்) ஆகியோர் திமுக ஆட்சி தொடர வேண்டிய அவசியம் குறித்தும், சாதனைகள் குறித்தும் மக்கள் மத்தியில் கருத்துரைகளை நிகழ்த்தினார்கள். இராமசாமி (தெற்கு பகுதிச் செயலாளர்), இனியன் ஆகியோர் நன்றியுரை ஆற்றினர்.

**செய்தி:பரிமளராசன்**

**சேலம்:** மாவட்டக் கழகம் நங்கவள்ளி ஒன்றியத்தின் சார்பில் "தொடரட்டும் தமிழ்நாட்டில் சாதனைகள்" திமுக ஆட்சியை உறுதி செய்வோம்! மதவெறி அரசியலை விரட்டி அடிப்போம்! 28.02.2026 நாள் முழுவதும் நங்கவள்ளி பேருந்து நிலையம், ஜலகண்டபுரம் பேருந்து நிலையம், எடப்பாடி பேருந்து நிலையம் ஆகிய 3 இடங்களில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சந்திரசேகரன் (நங்கவள்ளி நகரச் செயலாளர்), கிருஷ்ணன் (மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), கவியரசு (தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர்) ஆகியோர் தலைமை வகித்தனர். பிரபாகரன் (மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர்), தங்கதுரை (மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். சேலம் கோகுல் வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தை கோவிந்தராஜ் (சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர்) தொடங்கி வைத்தார். மோகன்ராஜ் (இளம்பிள்ளை நகரச் செயலாளர்), கோனூர் வைரமணி (திமுக தலைமைக் கழக பேச்சாளர், சேலம் மேற்கு மாவட்ட இலக்கிய அணித் தலைவர்), சரவணபரத் (வழக்கறிஞர்-திமுக), சக்திவேல் (கழகத் தலைமைக் குழு உறுப்பினர்), மோகன்ராஜ் (இளம்பிள்ளை நகரச் செயலாளர்), உமாசங்கர் (வனவாசி நகரச் செயலாளர்) ஆகியோர் பரப்புரை கூட்டத்தின் நோக்கங்களை பொதுமக்களிடையே எடுத்துரைத்தனர். சிவசண்முகம் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்) நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. பரப்புரை கூட்டத்தில் கலந்துகொண்ட நங்கவள்ளி பேரூராட்சியின் முன்னாள் துணைத் தலைவர் சண்முகம், நங்கவள்ளி 10-வார்டு திமுக கவுன்சிலர் முத்துசாமி, திமுக 1-வது வார்டு பிரமுகர் பழனிச்சாமி மற்றும் உரையாற்றிய சரவணபரத் ஆகியோருக்கு நினைவுப் பரிசாக கழக வெளியீடுகள் வழங்கப்பட்டன. தோழர்கள் கதிர், மேட்டூர் ஆர்.எஸ் ஜெகதீஷ், மேட்டூர் ஆர்.எஸ் சுரேஷ், பொட்டனேரி ரவிக்குமார், மேட்டூர் முத்துராஜ், ராமச்சந்திரன், நிலவன், குடந்தை பாலன், நாகராஜ் (தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்), எடப்பாடி குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். கண்ணன் (நங்கவள்ளி நகரத் தலைவர்)நன்றி கூறினார்.



**செய்தி: பிரபாகரன்.**

**சென்னை:** தாம்பரம் பிப்-28 மாலை 6 மணிக்கு, சண்முகம் சாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அருண் கோமதி (தாம்பரம் நகர அமைப்பாளர்) தலைமையில், ம.கி. எட்வின் பிரபாகரன் ஒருங்கிணைத்தார். மறைந்த பொதுவுடைமைத் தலைவர் நல்லகண்ணு படத்திறப்பு செய்தனர். இரா. உமாபதி (மாவட்டச் செயலாளர்),கார்மேகம், பொன்ராஜ்-பேரன்பு (தமிழ்நாடு மாணவர் கழகத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்),லதா,சத்யா குழுவினரின் சிந்தனையைத் தூண்டும் பாடல்களும், நையாண்டி நிகழ்ச்சியும் அப்பகுதி வியாபார மக்களை ஈர்த்தது.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திமுக மாநில மாணவரணி துணைச் செயலாளர் தமிழ். கா. அமுதரசன், மமக காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர் சரீம் கான், இடதுசாரி சிந்தனையாளர் பேரா பெ. அண்ணாதுரை, சிபிஎம் தாம்பரம் பகுதிக் குழு உறுப்பினர் ஜெயவேல், கல்லூரி மாணவர் மோரிசன் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்று கருத்துரையாற்றினார்கள். நிகழ்ச்சிக்கு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா, விசிக மாவட்டச் செயலாளர் ப. சாமுவேல் எபினேசர், மதிமுக தலைமை செயற்குழு உறுப்பினர் துரை. மணிவண்ணன், திக பொறுப்பாளர் மடிப்பாக்கம் ஜெயராமன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் நினைவுப் பரிசுகளை வழங்கினார். மேடை அமைக்கும் பணியை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப. அருண், தோழர்கள் மயிலை சுகுமார், கொளத்தூர் சுகந்தன், தாம்பரம் நந்தகுமார், பல்லாவரம் தீபக், சுரேந்தர், அசோக்,காட்டான்குளத்தூர் கிறிஸ்டோ ஆகியோர் கவனித்துக் கொண்டனர். சிறப்பு அழைப்பாளர்களை நேரில் சந்தித்து அழைப்பிதழை வழங்கும் பணியிலும், வணிகர்களிடம் நன்கொடை திரட்டும் பணியிலும் தோழர்கள் இரண்யா, மயிலை மனோகர், முழக்கம் உமாபதி, திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபிநாத், பகுதி அமைப்பாளர் த.நா. சூர்யா, வீரா, கேகே நகர் கார்த்தி ராஜேந்திரன், புகழேந்தி, கூடுவாஞ்சேரி சுபாஷ் ஆனந்த், வடசென்னை மனோஜ்குமார் ஆகியோர் ஈடுபட்டனர்.


**மயிலாப்பூர் பகுதிக் கழகம் சார்பாக மயிலை இராவணன் ( மாவட்டத் துணைச்செயலாளர்) கழக ஏடான "புரட்சிப் பெரியார் முழக்கம்" இதழுக்கு ரூ.10,000-அய் கழகப் பொதுச்செயலாளரிடம் ஒப்படைத்தனர். தாம்பரம் தோழர் பரணி கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.** கூட்டம் நடத்திய விதத்தை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா வெகுவாகப் பாராட்டினார். அவருக்கு நினைவுப்பரிசாக கழக நூல்கள் வழங்கப்பட்டன. ரூ.2,000க்கு கழக வெளியீடுகள் விற்பனையாகின. மாவட்டத் தலைவர் மா. வேழ வேந்தன், தோழர்கள் காவை அஜீத், கடலூர் சிவகுமார், ஜெயச்சந்திரன் (விசிக), லயோலா ஃபிரான்சிஸ், சிபிஎம் ஜாஃபர், செய்தியாளர் பிரசாந்த், வேளச்சேரி இம்மேனுவல் துரை, பிரீத்தி, தேன்மொழி (IT WING), ஷர்மிளா (மாணவர் கழகம்), யாழினி, தினியா, மயிலை மாணிக்கம், அருண், தாம்பரம் மகேஷ், அருவி ஊடகம் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பலர் பங்கேற்றனர்.

**செய்தி: எட்வின் பிரபாகரன்**

## கழகம் சார்பில் தோழர் நல்லகண்ணுக்கு வீரவணக்கம்

**சென்னை:** தோழர் நல்லகண்ணு விடைபெற்றார். 25.02.2026 அன்று தியாகராயர் நகர் பாலன் இல்லத்தில் அவரது உடலுக்கு கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் தோழர்கள் பங்கேற்று வீரவணக்கத்தை செலுத்தினார்கள்.

போராசிரியர் சரஸ்வதி, தபசிகுமரன் (தலைமை நிலையச் செயலாளர்), அன்பு தனசேகர் (தலைமைக் குழு உறுப்பினர்), உமாபதி (மாவட்டச் செயலாளர்), இராவணன் (மாவட்டத்துணைச் செயலாளர்), சேத்துப்பட்டு இராசேந்திரன் (வடசென்னை மாவட்டத் தலைவர்), தட்சணாமூர்த்தி (மாவட்ட அமைப்பாளர்), அருண் (இளைஞரணி அமைப்பாளர்), பேரன்பு (சென்னை மாவட்ட மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர்) மற்றும் கழகத் தோழர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.






**சேலம்:** இந்திய பொதுவுடைமை கட்சியின் நங்கவள்ளி ஒன்றியம் சார்பாக நல்லகண்ணு அவர்களுக்கு இரங்கல் கூட்டம் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தோழர் நல்லகண்ணு அவர்களின் படத்திற்கு மலர் தூவி, இரங்கல் உரையாற்றி வீரவணக்கம் செலுத்தினார்.

எம்.எம் ரத்தினவேல் (காங்கிரஸ்), நல்லபிரபு (தி.மு.க, நங்கவள்ளி மத்திய ஒன்றியச் செயலாளர்), (தி. மு.க ) ஜெயவேல், மாணிக்கவேல் (அ.தி.மு.க நங்கவள்ளி வடக்கு ஒன்றியச் செயலாளர்), என்.ஆர் ராஜகோபால் (சிபிஎம் நங்கவள்ளி ஒன்றியச் செயலாளர்), சிபிஅய் பொறுப்பாளர்கள் தங்கவேல் (விவசாய சங்க ஒன்றியத் தலைவர்), நடராஜன் (நங்கவள்ளி நகரச் செயலாளர்), சண்முகம் (மாவட்டக் குழு உறுப்பினர்), கோகுலகிருஷ்ணன் (நங்கவள்ளி ஒன்றிய துணைச் செயலாளர்) ஆகியோர் இரங்கல் உரையாற்றினார்கள். கழகத் தோழர்கள் உமாசங்கர் (வனவாசி நகரப் பொறுப்பாளர்), வீரக்கல் இந்திராணி, வனவாசி கதிர், பன்னீர், காவை அவினாசி, கொங்கணாபுரம் கோகுலக்கண்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

## காவலாண்டியூர் படிப்பகத்தில் ஜாதி மறுப்பு திருமணம்!

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி மாதையன்-செல்வி ஆகியோரது மகள் அபிநயா, நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், ஆயிக்கவுண்டன் பாளையம் வேல்முருகன்-பானுமதி ஆகியோரது மகன் தமிழ்வாணன் ஆகியோருக்கு 20.02.2026 வெள்ளிக்கிழமை காவலாண்டியூர் பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈஸ்வரன் தலைமையில் தோழர்கள் கணேசன்,அவிநாசி ஆகியோரது முன்னிலையில் ஜாதி மறுப்பு, சுயமரியாதை திருமணம் நடைபெற்றது. குமரேசன் மற்றும் மணமக்கள் நண்பர்கள் கலந்து கொண்டனர்.



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP

Posted :March 06, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran